# Official Spokesperson's response to media queries on the revised map of Nepal released today by Government of Nepal

May 20, 2020

## நேபாள் அரசாங்கம் இன்று வெளியிட்ட திருத்தப்பட்ட நேபாள வரைப்படத்தை பற்றிய ஊடகக் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வசெய்தித் தொடர்பாளர் அளித்த பதில்

மே 20, 2020

நேபாள் அரசாங்கம் இன்று வெளியிட்ட திருத்தப்பட்ட நேபாள வரைப்படத்தை பற்றிய ஊடகக் கேள்விகளுக்கு அளித்த பதிலில், அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. அனுராக் ஸ்ரீவத்சவா கூறியதாவது,

"நேபாள அரசு திருத்தப்பட்ட வரைபடத்தை இன்று வெளியிட்டுள்ளது. இந்த ஒருதலைபட்ச செயல் வரலாற்று உண்மைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்ததல்ல. நிலுவையில் உள்ள எல்லைப் பிரச்சினைகளை இராஜதந்திர உரையாடலின் மூலம் தீர்ப்பது இருதரப்பு புரிதலுக்கு முரணானது. பிராந்திய உரிமைகோரல்களின் இத்தகைய செயற்கை விரிவாக்கம் இந்தியா ஏற்றுகொள்ளாது.

இந்த விஷயத்தில் இந்தியாவின் நிலையான நிலைப்பாட்டை நேபாளம் நன்கு அறிந்திருக்கிறது, மேலும் இதுபோன்ற நியாயப்படுத்தப்படாத வரைபடக் கூற்றிலிருந்து விலகி இந்தியாவின் இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மதிக்க நேபாள அரசை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். நிலுவையில் உள்ள எல்லைப் பிரச்சினைகளைத் தீர்க்க நேபாளத் தலைமை இராஜதந்திர உரையாடலுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்"

**நியூ டெல்லி**
**மே 20, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.